**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 65/2023

**வாக்குமூலம்.வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | தொழில் | |
| த/பெ. | கருப்பையா | வயது | 60/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 26.08.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி ராமசந்திரன் எனக்கு உறவினர் இல்லை.எனது ஊர்காரர்.எனது நிரூபணவாக்குமூல விவரம் நான் தான் சொன்னேன்.புல எண் 151/8 வாதி ராமசந்திரனுக்கு வழிமுறை சொத்து என்று நான் சொல்லிருப்பது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்தில் வாதியும் அவரது குடும்பத்தினரும் வீடு கட்டி குடியிருந்து அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி வைக்கோல் போர் வைத்து டிராக்டர் வைத்து அனுபவம் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை சுற்றி நால்புறத்திலும் வாதிக்கு சொந்தமான சொத்து இருந்தாலும் வழக்கு சொத்தை பொறுத்த வரை வாதி ஒரு ஆக்கிரமிப்பு தாரர் என்றால் சரியல்ல. வாதி எனது ஊர் காரர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**